Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

**C.C No. 455/2022**

Depositions of -**மணிகண்டன்**..witness for ...Prosecution Side Witness- 2 (LW-8)

| | |
|---|---|
| Name | - மணிகண்டன் (சார்பு ஆய்வாளர்) (PW -2) |
| Father's name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.12.2023.

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

(எதிரி ஆஜர் )

முதல் விசாரணை-

நான் தற்போது போடி தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரியான சார்பு ஆய்வாளர் வேல்மணிகண்டன் என்பவர் பணி மாறுதல் ஆகி சென்றுவிட்டதால், அவர்களின் கையெழுத்து தனக்கு நன்கு பரிட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் . கடந்த 19.03.2022–ஆம் தேதி 08.00 மணிக்கு போடி அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று

அங்கு சென்று சிகிச்சையில் இருந்த ராஜாக்கனி மனைவி ராஜாத்தி என்பவரிடம் இருந்து புகார் வாக்குமூலும் பெற்று, நிலையம் வந்து நிலைய குற்ற எண் குற்ற எண் .86/2022, இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 354 , 355, 324, 506(i) , 109 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் . **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.2, முதல் தகவல் அறிக்கை அ .த.சா.ஆ.3** . அன்றைய தினமே 10.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் சம்பவயிடம் சென்று , சாட்சிகள் பொம்முத்தாய், பொட்டியம்மாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் . **பார்வை மகஜர் அ .த.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ .த.சா.ஆ.5** . அதன்பின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . இவ்வழக்கின் 1 வது எதிரி ராஜாக்கனி அன்றையதினமே 13.40 மணிக்கு போடி துரைராஜபுரம் கால னி வடக்குப் பக்கம் உள்ள தங்கபாலம் அருகே வைத்து கைது செய்து , நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் . மேற்படி இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரி விசாரணை முடிவில் , சுருளியம்மாள் என்பவரை நீக்கம் செய்து எதிரி ராஜாக்கனி என்பவர் மீது இ.த.ச பிரிவுகள் 94(b), 323, 354 , 355, 324, 506(i) , 109 –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் .

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல . மேற்படி எதிரிக்கும், புகார்தாரருக்கும் இடையே இருந்த பிரச்சனையை மனதில்

வைத்து பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல . மேற்படி இவ்வழக்கின் சாட்சிகளை சொன்ன நேரத்தில் , சொன்ன இடத்தில், வைத்து சார்பு ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல . பார்வை மகஜர் , மாதிரி வரைபடம் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் குறிப்பிட்டுள்ள சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல . மேற்படி வழக்கின் சார்பு ஆய்வாளர் சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.12.14 17:16:17 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.